# என்யுஎஸுக்கு $6.75 மில்லியன் வாழ்நாள் நன்கொடை

‘டிமென்ஷியா’ எனப்படும் ஞாபக மறதி நோயால் பாதிக்கப்பட்டு இருந்த மறைந்த டாக்டர் ஃபிரெடா பாலின் சொத்துகளை நிர்வகிப்பவர்கள், அவர் படித்த சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்திற்கு (என்யுஎஸ்) $6.75 மில்லியனை வாழ்நாள் நன்கொடையாக அளித்துள்ளனர். என்யுஎஸ் நேற்று வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்தது.

சிங்கப்பூர் பொது மருத்துவமனையில் குழந்தைநல மருத்துவராக பணியாற்றியிருந்த டாக்டர் ஃபிரெடாவின் இந்த அன்பளிப்பு, 2007ஆம் ஆண்டில் உயிலில் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

சிறப்புக் கற்றல் தேவைகளுடைய சிறுவர்கள் மீது அவர் தனி அக்கறை கொண்டிருந்தார். என்யுஎஸ் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியில் பயிலும் வசதி குறைந்த மருத்துவ மாணவிகளுக்கு உதவ தமது சொத்தின் குறிப்பிடத்தக்க அளவை நன்கொடையாக வழங்கினார்.

இது குறித்து என்யுஎஸ் தலைவர் பேராசிரியர் டான் எங் சாய் கூறுகையில், “மறைந்த டாக்டர் ஃபிரெடா பாலின் இந்தத் தாராள நன்கொடையைப் பெற்றுக்கொள்வதில் நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அடுத்த தலைமுறை பெண் மருத்துவத் தலைவர்களை உருவாக்குவதில் இந்த அன்பளிப்பு பெரிதும் உதவும்,” என்றார்.

நிதி தேவையுடைய மருத்துவ மாணவிகளுக்காக கல்வி உதவி நிதியை என்யுஎஸ் மருத்துவப் பள்ளி அமைக்க இந்த அன்பளிப்பு உதவும்.

2016 ஆகஸ்ட்டில் தமது 87வது வயதில் டாக்டர் ஃபிரெடா காலமானார். முன்னதாக, இவரது பணிப்பெண்ணும் இரு வெளிநாட்டு ஊழியர்களும் இவரைத் தவறாக வழிநடத்தி $5 மில்லியனைப் பெற முறைகேடு செய்தனர். அதன் பின்னர், டாக்டர் ஃபிரெடாவின் சொத்துகளை நிர்வகிப்பவர்கள் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்து அந்த நிதியை மீட்டனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.